22—

சூரிய சக்தி விளக்குகள்

*15399—**திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாகக் கட்டப்பட்டுள்ள பசுமை வீடுகளில் சூரிய சக்தியால் எரியும் அடர்குறு விளக்குகள் பொருத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 2011-2012 மற்றும் 2012-2013 ஆகிய இரண்டு நிதியாண்டுகளில் கிராமங்களில் வாழும் ஏழை மக்களுக்கு 1,20,000 பசுமை வீடுகள் ரூ.2,174.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் பயனாளிகளின் முழு ஒத்துழைப்புடன் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன. பசுமை வீடுகளில் உறங்கும் அறை, வசிக்கும் அறை, சமையலறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளுக்கு ஒரு விளக்கு வீதம் சூரிய ஒளி சக்தியில் எரியும் 5 அடர்குறு விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. பசுமை வீடுகளுக்கு* TEDA-Tamil Nadu Energy Development Agency *என்ற அரசு நிறுவனத்தின்மூலம் சூரிய சக்தி மின் விளக்குகள் அமைக்கப்படுவதாக அறிகிறேன். சூரிய சக்தி மின் விளக்குகள்*

ஒவ்வொன்றும் என்ன மதிப்பீட்டில் இந்த நிறுவனத்தினால் அமைக்கப்படுகின்றன? இதற்காக ஒவ்வொரு பசுமை வீட்டிற்கும் என்னென்ன பொருட்கள் வழங்கப்படுகின்றன, i.e. the list of components which are being supplied, தென்காசி தொகுதியில் கட்டப்பட்டுள்ள பசுமை வீடுகளுக்கு சூரிய சக்தி மின் விளக்குகள் பொருத்தும் பணி எப்போது நிறைவேறும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமை வீடுகள் திட்டத்தில் 300 சதுர அடியில் வீடுகள் கட்டப்படுகின்றன. 300 சதுர அடியில் வீடு கட்டுவதற்கு ரூ.1,80,000/- ஒதுக்கப்படுகிறது. சூரிய சக்தியுடன்கூடிய மின் விளக்கு வசதிக்காக ரூ.30,000/- ஒதுக்கப்பட்டு, அந்த ரூ.30,000/-ல் விளக்குகள் பொருத்தப்படுகின்றன. இதற்குத் தேவையான உபகரணங்கள் solar panel, battery, inverter and cable வழங்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் 5 விளக்குகள் பொருத்துவதற்குரிய உபகரணங்கள் வீடுகளில் பொருத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டிக்கு அருகில் இட்டேரி கிராமத்தில் சூரிய மின்சக்தியுடைய தெரு விளக்குகளை இயங்கச் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுபோன்று தென்காசி நகரில் மக்கள் நெருக்கடிமிக்க பகுதிகளான பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்கள், கூளக் கடை பஜார், அம்மன் மற்றும் சுவாமி சன்னதி, வாய்க்கால் பாலம் பகுதி, சந்தைப் பகுதி மற்றும் பழைய மருத்துவமனைப் பகுதிகளில் இரவு நேரங்களில் மக்களுக்குப் பயன்படும் வகையில், சூரிய சக்தி தெரு விளக்குகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்களூடாகவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய துணைக் கண்டத்தில் எந்த மாநில அரசும் கொண்டுவராத புதிய முயற்சியாக, சூரிய சக்தியின்மூலமாக தெரு விளக்குகள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது அறிவித்தார்கள். அதனடிப்படையிலே ஒவ்வொரு நிதியாண்டும் 20,000 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சிப் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இப்பொழுது இந்த அமைப்புகள் முழுவதும் கிராமப்புறங்களிலே பொருத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பணி முடிகின்றபட்சத்தில் நகர்ப்புறங்களுக்கும் விரிவடைகின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் அது நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.*

முற்பகல் 10-30

திரு. பு. வெற்றிவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் மின் அழுத்த மின் விளக்கு கோபுரங்களைச் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிறுவிட அனுமதிப்பதில்லை. ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்த* high mast light-*களை நிறுவிட அனுமதி அளிக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களிடம் இதைத் தெரிவித்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் இந்த* high mast light-*களை நிறுவிட ஆணை பெற்றுத் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபோன்ற உயர் கோபுரங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால், அது கூடுதலான மின்சாரத்தை ஈர்க்கின்ற காரணத்தினால், அதைத் தவிர்ப்பதற்காக இப்போது உயர்மட்ட கோபுர மின் விளக்குகள் அமைப்பதற்கு அனுமதி கொடுப்பதில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் தவிர்த்து, மின்சாரத்தை மிச்சப்படுத்தக்கூடிய வகையிலே கொண்டுவருகின்ற திட்டங்களுக்கு உதவும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

23—

கல்லூரிகள்

*14443—**திரு. ம. கலை அரசு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டு தொகுதியில் கலைக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அணைக்கட்டு தொகுதியில் கலைக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதி சாதாரண, சாமானிய,